மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

## அலகு– 3 வளையாபதி நூற்குறிப்பு

1. காப்பியம் முழுவதும் கிடைக்கவில்லை.
2. ஆசிரியர் பெயர் கிடைக்கவில்லை.
3. உரையாசிரியர்கள் மேற்கோளாகவும், புறத்திரட்டிலும் இருந்து 72 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.
4. 9ஆம் நூற்றாண்டு என்று கருதப்பெறுகின்றது.
5. உரையாசிரியர்களால் உயர்வாக மதிக்கப்படும் காப்பியம்.
6. இலக்கியச் சுவையில் வல்லமைப் பெற்ற இலக்கியம்.
7. அறத்தின் பாங்கு, எளிமை, தெளிவு ஆகியவை இந்த இலக்கியத்தின் இயல்புகள்.
8. வைசியபுராணம் 35வது சருக்கத்தில் வளையாபதி கதை இடம் பெற்றுள்ளது.

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C

### அலகு– 3 வளையாபதி நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

- அலகு– 3 வளையாபதி - கதைச் சுருக்கம்
- நவகோடி நாராயணன் என்னும் வைர வணிகன் பிற்பட்ட குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தியை மணந்தான்.
- அதனால் வணிகர் குலத்தினர் வெறுத்தனர்.
- தான் மணந்த பெண்ணை விட்டுப் பிரிந்து அயல்நாடு சென்று பொருளீட்டி காவிரிப்பூம்பட்டினத்தில் தன் குலத்துப் பெண்ணொருத்தியோடு வாழ்ந்து வருகிறாள்.
- முன்பு மணந்த பெண்ணுக்குப் பிறந்த ஆண் குழந்தை வளர்ந்து, வளையாபதி என்னும் பெயரோடு இளைஞனாகி தன் தந்தை நவகோடிநாராயணன் என்று அறிகிறான்.
- தன் தாய்க்கு நீதி வேண்டும். தான் இன்னாருடைய மகன் என்ற அங்கீகாரம் வேண்டும் என்று விரும்பிய வளையாபதி தன் தந்தை நவகோடிநாராயணனைச் சந்தித்து தான் தங்கள் மகன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு தன் விருப்பத்தைத் தெரிவித்து வணிகர் அவையினரால் வைரவணிகன் நவகோடிநாராயணன் மகன் என்று அறிவிக்கச்செய்கின்றான்.
- பிறகு, தன் தந்தையை அழைத்துக்கொண்டு தன் தாயிடம் சேர்க்கின்றான். இதுவே வளையாபதி வரலாற்று கதைச்சுருக்கம் ஆகும்.

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C

அலகு– 3 வளையாபதி நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

- வளையாபதி கடவுள் வாழ்த்து
- உலகம் மூன்றும் ஒருங்குடன் ஏத்தும்மாண்

  திலகம் ஆய திறல்அறிவன் அடி

  வழுவுஇல் நெஞ்சொடு வாலிதின் ஆற்றவும்

  தொழுவல் தொல்வினை நீங்குக என்று அறியான்
- பாடல் பொருள் விளக்கம் : மூன்றுலகிலும் வாழுகின்ற நல்லோர் ஒருங்கிணைந்து வாழ்த்தி வணங்குவதற்குக் காரணமான பெருஞ்சிறப்பையுடைய அருகக்கடவுளின் திருவடிகளை அடியேன் பழவினை கெடும் பொருட்டும் அவை கெடும் பொருட்டுக் குற்றந் தீர்ந்த நன்னர் நெஞ்சத்தோடிருந்து தூய்தாக அவன் கூறிய நல்லறங்களை மேற்கொண்டு ஒழுகவும் திருவருள் கூர்தல் வேண்டும் என்று வணங்குகின்றேன் என்பது பாடல் பொருள் விளக்கமாகும்.

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C

அலகு– 3 வளையாபதி நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

- சாது சரணம்
- துக்கந் துடைக்கும் துகளறு காட்சிய

  நிக்கந்த வேடத்து இருடிகணங்களை

  ஒக்க அடிவீழ்ந்து உலகியல் செய்தபின்

  அக்கதை யாழ்கொண்டு அமைவரப் பண்ணி
- பாடல் பொருள் விளக்கம்:
- பிறவித்துன்பத்தை முற்றிலும் போக்குவதற்குக் காரணமான குற்றமற்ற மெய்க்காட்சியுடைய பதினொரு குணத்தையுடைய நிக்கந்த குல்லகர் என்னும் துறவோர் குழுவினை மனமொழி மெய்கள் ஒரு சேரத் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கிய பின்னர் யாழினைக் கொண்டு அதனை ஆராய்ந்து சுதி சேர்த்தல் வேண்டும். இருடிகணங்கள் - துறவோர் குழு

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C

அலகு– 3 வளையாபதி நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

- 3. நெஞ்சறிவுறூஉ
- நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போதவிழ்ந்து
  கோலம் குயின்ற குழல்வாழி நெஞ்சே
  கோலங் குயின்ற குழுலுங் கொழுஞ் சிகையுங்
  காலக் கனலெரியின் வேம்வாழி நெஞ்சே
  காலக் கனலெரியின் வேவன கண்டாலுஞ்
  சால மயங்குவது என் வாழி நெஞ்சே
- பாடல்பொருள் விளக்கம்:
- நெஞ்சே! நீ மகளிருடைய நீல நிறமுடைய நெய்பூசிய மலர்கள் சூட்டி ஒப்பனை செய்யப்பெற்ற அழகிய கூந்தல் என்று பாராட்டுகின்றாய். அவ்வாறு ஒப்பனை செய்யப்பெற்ற அக்கூந்தலில் கொழுவியக் கொண்டையும், ஈமத்தீயாகிய நெருப்பிலே வெந்தழியக் கூடியதுதானே. அவ்வாறு வெந்தழியும் என அறிந்தும் ஒப்பனை செய்யப்பெற்ற அக்கூந்தலைக் கண்டு மயங்குவதற்கு காரணம் என்ன? நெஞ்சே நீ வாழ்வாயாக! என்பது பொருளாகும்.

# மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C

அலகு– 3 வளையாபதி நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

- 4. இதுவுமது (நெஞ்சறிறூஉ)
- வித்தகர் செய்த விளங்கு முடிகவித்தார்
  மத்தக மாண்பழரதல் காண்வாழி நெஞ்சே
  மத்தக மாண்பழிதல் கண்டால் மயங்காதே
  உத்தம நன்னெறிக்கண் நின் றூக்கஞ் செய்தியேல்
  சித்தி படர்தல் தெளிவாழி நெஞ்சே
- பாடல் பொருள் விளக்கம்: என் நெஞ்சமே நீ நீடு வாழ்வாயாக! தொழில் திறமையுடைய கம்மியரால் செய்யப்பெற்ற கீரிடம் அணிந்த மன்னர்களுடைய சிறப்பும் ஒரு காலத்தில் அச்சிறப்பையெல்லாம் இழந்து பிறரால் இகழப்படும் நிலை ஏற்படும் என்பதை நினைத்துக் காண்பாயாக! அவ்வாறு அரசரின் சிறப்பு மாறக்கூடும் என்பதை ஆராய்ந்து மெய்த் தன்மை அறிந்து தலைச்சிறந்த நல்லொழுக்கத்தினை பின்பற்றினால் நீ வீடுபேறு அடைவாய் என்பதை உணர்ந்து கொள்வாய் நெஞ்சே! என் நெஞ்சமே நீ நீடு வாழ்வாயாக! என்பது பொருளாகும்.

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C

அலகு– 3 வளையாபதி நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

- 5.மக்கள் யாக்கையும் செல்வமும் பெறுதல் அரிதெனல்
- வினைபல வலியினாலே வேறுவேறுயாக்கையாகி
  நனிபல பிறவி தன்னுட் துன்புறூஉ நல்லுயிர்க்கு
  மனிதரின் அரியதாகும் தோன்றுதல் தோன்றினாலும்
  இனியவை நுகர எய்தும் செல்வமும் அன்னதேஆம்
- பாடல்பொருள் விளக்கம்:
- பல்வேறு வகைப்பட்ட தீவினைகளின் ஆற்றலாலே பல்வேறு வகைப்பட்ட உடம்புகளை உடையவனாகி மிகவும் பலவாகிய பிறப்புக்களிலே புகுந்து அவ்வப் பிறப்புக்களிலெல்லாம் துயரம் எய்துகின்ற நல்ல உயிர்க்கு மக்கட்பிறப்பிலே பிறத்தல் மிகவும் அரிதான ஒன்றாகும். அப்படிப்பட்ட மனிதப்பிறப்பிலே பிறந்தாலும் இனியப் பொருட்களை நுகர்வதற்குரிய செல்வம் பெறுவது இன்றியமையாதது பிறப்பைப் போன்றே என்பதை உணர்வது மாண்பாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C

அலகு– 3 வளையாபதி நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

- 6.மக்கள் யாக்கையும் செல்வமும் பெறுதல் அரிதெனல்

உயர்குடி நனியுள் தோன்றல் ஊனம் இல் யாக்கைஆதல்
மயர்வுஅறு கல்விகேள்வித் தன்மையால் வல்லர் ஆதல்
பெரிதுஉணர் அறிவே ஆதல் பேரறம் கோடல் என்றுஆங்கு
அரிதுஇவை பெறுதல் ஏடா பெற்றவர் மக்களென்பார்

பாடல் பொருள் விளக்கம் :

மக்கட்பிறப்பு உயர்குடியில் தோன்றுதல். உடல்உறுப்பு குறைபாடின்றி பிறத்தல். ஆறிவு மயக்கமின்றி கல்வியறிவும், கேள்வியறிவும் பெறுவதால் வரும் வன்மையுடையவராதல் மற்றும் செப்பம், நாண், ஒழுக்கம், வாய்மை, நகை, இன்சொல், இகழாமை, ஒழுக்கம் குன்றாமை, பண்பில் குறைவின்மை, சலம்பற்றி சால்பில செய்யாமை, பணிவுடைமை, இன்னோரன்ன மாந்தர்க்கணிகலனாய நலமெல்லாம் உயர்குடிப்பிறப்புடையார்மாட்டு இயல்பால் உளவாகலும் ஏனையோரிடத்தில் இன்மை என்பதும் மக்களின் இயல்பு என்பதும் அறிவாய் தோழனே! ஏடா என்னும் சொல்லுக்கு தோழா என்று பொருள்.

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C

அலகு– 3 வளையாபதி நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

- 7.மக்கள் யாக்கையும் செல்வமும் பெறுதல் அரிதெனல்
- உயர்குடி நனியுள் தோன்றல் ஊனமில்யாக்கை யாதல்
  மயர்வறு கல்விகேள்வித் தன்மையால் வல்லராதல்
  பெரிதுணர் அறிவே ஆதல் பேரறங் கோடல் என்றாங்கு
  அரிதிவை பெறுதலர் ஏடா பெற்றவர் மக்களென்பார்
- பாடல்பொருள் விளக்கம்:
- தோழனே! மிகவும் உயர்ந்த குடியில் தோன்றலும் குறைபாடில்லாத நல்லுடம்பு பெறுதலும் கல்வியாலும் கேள்வியாலும் வலிமையுடையவராதலும், மெய்யுணர்வு அறிதலும், நல்லறத்தை மேற்கொண்டு ஒழுகுதல் என்று கூறப்படுகின்ற இப்பேறுகள் ஒன்றாகப் பெற்றவர்கள்தான் மக்கட்பிறப்புடையவர்கள் என்று மதிக்கப்படுவர்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C

அலகு– 3 வளையாபதி நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50 வரை

- 7.கற்புடை மகளிர்
- நாடும் ஊரம் நனி புகழ்ந்து ஏத்தலும்
  பீடுறும் மழை பெய்கெனப் பெய்தலும்
  கூடல் ஆறு அவர் நல்லது கூறுங்கால்
  பாடுசால்மிகு பத்தினிக்கு ஆவதே
- பாடல் பொருள் விளக்கம்:
- நாடும் ஊரும் புகழ்கின்ற புகழ்ச்சி தலைவன் தலைவி இருவருக்கும் பொதுவாயினும் அப்புகழுக்குக் காரணமாயிருப்பது தலைவியே அன்றித் தலைவன் இல்லை என்பது பாடலின் கருத்தாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.50 முதல் 10.50

## 8. கற்பில் மகளிர்

பள்ளம் முதுநீர்ப் பழகினும் மீனினம்
வெள்ளம் புதியது காணின் விருப்புறூஉங்
கள்ளவிழ் கோதையர் காமனோடு ஆயினும்
உள்ளம் பிறிதாய் உருகலும் கொள்நீ

- பாடல் பொருள் விளக்கம் :
- மீன் கூட்டம் பழையதாகிய ஆழமான நீர்நிலையில் வாழ்ந்தாலும் புதியதாகிய வெள்ளம் வருமிடத்து தனது பழையநீர்நிலைகளை வெறுத்து அப்புதிய வெள்ளத்தில் புகுவதற்குப் பெரிதும் விரும்பும். தேன் துளிர்க்கின்ற மலர் மாலையணிந்த மகளிர் காமவேளையே கணவனாகப் பெற்று அவனோடு வாழ்வாராயினும் புதிய ஆடவரைக் காணுமிடத்து மனமாறுபட்டு அவரைத் தழுவ நினைத்து மனமுருகும் இயல்புடையவராதலும் என்பதை நீ அறிந்து அவரை விரும்புதல் ஒழிக! என்பதாம். பள்ளமுதுநீர்ப் பொய்கை சிறப்புடைய கணவனுக்கு உவமை. மீனினம் மகளிர்க்கு உவமை.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –
ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம்:காலை 9.50 முதல் 10.50 வரை

- 9.கற்புடை மகளிர்
- உண்டியுள் காப்பு உண்டு உறுபொருட் காப்புண்டு
  கண்ட விழுப்பொருள் கல்விக்குக் காப்புண்டு
  பெண்டிரைக் காப்பது இலம் என்று ஞாலத்துக்
  கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே.
- பாடல் பொருள் விளக்கம்:
- உணவினை மூடியிட்டுக் காக்கலாம். பொருளை கருவூலம் வழி காக்கலாம். மிக்க பொருள்களைக் கள்வர் கவராதபடி காத்துக் கோடற்கும் வழிகள் உள்ளன. கற்றவற்றை மீண்டும் மீண்டும் படித்து மறவாமல் காத்துக்கொள்ளலாம். இதுபோன்றே மகளிர் கற்பழியாதபடி கணவன் முதலியோரால் காத்தற்கு வழியல் என்று கற்றறிந்தோர் கூறியுள்ளனர் என்பது பொருளாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

- 10. கற்புடை மகளிர்
- எத்துணை ஆற்றுள் இடுமணல் நீர்த்துளி
  புற்பனி உக்க மரத்திலை நுண்மயிர்
  அத்துணையும் பிறர் அஞ்சொலினார்மனம்
  புக்கனம் என்று பொதியறைப் பட்டார்
- பாடல் பொருள் விளக்கம்:
- நீருள்ள ஆற்றில் உள்ள மணல் எத்தனையுண்டு என்பதும், ஆற்று வெள்ளத்தில் நீர்த்துளிகள் எவ்வளவு உண்டு என்றும், புல்லின் மேல் உள்ள பனித்துளிகள் எத்தனை என்பதும், மரங்களில் உள்ள இலைகள் எவ்வளவு உள்ளன என்பதும், உயிரினங்களின் உடலிலமைந்த நுண்ணிய மயிர்கள் எத்தனையுண்டு என்பதும் என்பதும் எண்ணிவிடமுடியாது. அப்படி எண்ணிலடங்காதவர்கள் அழகிய சொல்லையுடைய கற்பிலா மகளிரின் கண்களாகிய வலையில் அகப்பட்டு அவர்கள் அன்பு கொண்டு பழகுகின்றனர் என எண்ணி மகிழ்ந்து தீவினைக்கு ஆளாகின்றனர் பிறவியாகிய சிறையிலே அகப்பட்டவர்கள் என்று பாடல் பொருள் அமைந்துள்ளது.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

11. கற்பில் மகளிர்

தனிப்பெயல் தனித்துளி தாமரை யின்மேல்
வளிபெறும் மாத்திரை நின்றற்று ஒருவன்
அளிப்பவன் ஒருவன் காணும் சிறுவரை அல்லால்
துளக்கிளர் நில்லார் துணைவளைக் கையார்

பாடல் பொருள் விளக்கம்:

தாமரையிலையின்மேல் வீழ்ந்த மழைத்துளி காற்று வீசும் வரையில் ஓரிடத்தில் நிற்கும். காற்று வீசியவுடன் நிலைப்பெயாந்தியங்குவது போலக் கற்பிலா மகளிர் நெஞ்சமும்தான் காமுற்றவன்பால் புதியவன் ஒருவனைக் காணும் வரையில் அன்பு கொண்டவர் நடந்து கொள்வர். புதியவனைக் கண்டவுடன் அவன்மேல் அன்பு கொண்டு பழக ஆரம்பித்துவிடுவர். இக்கருத்து

இனம்போன்றின் இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறுபடும் என்னும் 822வது குறட்பாவை ஒப்பிட்டு நோக்கலாம்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

## 12. மக்கட்பேறு

- போறையிலா அறிவு போகப்
  புணர்வு இலா இளமை மேவத்
  துறைஇலாவனச வாவி
  துகிலிலாக் கோலத் தூய்மை
  நறையிலா மாலை கல்வி
  நலமிலாப் புலமை நன்னீர்ச்
  சிறையிலா நகரம் போலும்
  சேயிலாச் செல்வம் அன்றே

- பாடல் பொருள் விளக்கம்:

- குழந்தையில்லாதவருடைய செல்வம், பொறுமையில்லாதவருடைய அறிவும், இன்பம் தரும் புணர்ச்சி பெறாத இளம் பருவமும், இறங்குவதற்குப் படித்துறையில்லாதத் தாமரைக்குளமும் ஆடையில்லாத ஒப்பனையினது தூயத்தன்மையும், மணமில்லாத மலர்மாலையும், நூல்கள் பலவும் கற்காத புலமைத்தன்மையும் நல்ல நீர் நிலைகள் இல்லாத நகரமும் போன்று பயனற்றதாகும் என்பது பொருளாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

- 13. அடக்கமுடைமை

- ஆக்கப்படுக்கும் அருந்தளைவாய்ப் பெய்விக்கும்
  போக்கப்படுக்கும் புலைநரகத்து உய்விக்கும்
  காக்கப்படுவன இந்திரியம் ஐந்தினும்
  நாக்கு அல்லது இல்லை நனிபேணும் ஆறே.

- பாடல் பொருள் விளக்கம் :

மக்கட்கு ஆக்கந்தருவதும் நாவே. அவரைச் சிறைக்கோட்டம் புகுவிப்பதும் அதுவே. இன்ப வாழ்க்கைக்கு வித்திடும் பிறவிக்கும், நரகத்திற்கு அனுப்புவதும் நாவே. ஆதலால் மெய் முதலிய ஐம்பொறிகளில் நாவே பெரிதும் விழிப்புடன் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

- 14 .அறமனை காத்தல்
- தாரம் நல்வதம் தாங்கித் தலைநின்மின்
  ஊரும் நாடும் உவத்தல் ஒருதலை
  வீரவென்றி விறலிமிகு விண்ணவர்
  சீரின் ஏத்திச் சிறப்புஎதிர் கொள்பவே
- பாடல் பொருள் விளக்கம்:
- மனிதர்களே! நீங்கள் உங்கள் காதல் மனைவியரை நன்கு புரிந்து கொண்டு அன்பு கொண்டு வாழ்வீராயின் நீங்கள் வாழும் ஊர் மட்டுமின்றி அனைத்து நாட்டு மக்களும் உங்கள் வாழ்வினைக் கண்டு மகிழ்வது ஒரு தலையானது. அதுமட்டுமின்றி வீரத்தாலுண்டாகிய வெற்றிப் பெருமை மிக்க தேவர்களும் உங்கள் புகழ் காரணமாக உங்களைப் பாராட்டித் தொழுது சிறப்பாக உங்களை எதிர்கொண்டழைப்பர்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

- 15. விரதத்தின் விரிவகை, பிறன்மனை நயவாமை முதலியன
- பெண்ணின் ஆகிய பேரஞர்ப் பூமியுள்
  எண்ணம் மிக்கவர் எண்ணினும் எண்ணிலர்
  பின்னி நின்ற பெருவினை மேல்வரும்
  என்னதாயினும் ஏதில் பெண்நீக்குமின்
- பாடல் பொருள் விளக்கம் :
- துன்பம் தருகின்ற நரகர் உலகத்தில் இருக்கும் ஆடவர்கள் பிறர் மனைவிமாரை விரும்பி தீவினை செய்தவர்களே அதிமானவர்கள். பிறர்மனை நயத்தல் மாபெருந்தீவினை. இதனால் எத்தனை பிறவி எடுத்தாலும் தீவினைப்பலன் தொடர்ந்து கொண்டே இருக்கும். எனவே பிறர் மனைவிமாரை விரும்புதலை ஒழித்தலே நலமாகும் என்பது கருத்தாகும்.
- பேரஞர்பூமி – நரகர் உலகம் என்பது பொருள்

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

- 16. விரதத்தின் விரிவகை, பிறன்மனை நயவாமை முதலியன
- பொய்யன்மின் புறங்கூறன்மின் யாரையும்
  வையன்மின் வடிவல்லன் சொல்லி நீர்
  உய்யன்மின் உயிர் கொன்று உண்டு வாழுநாள்
  செய்யன்மின் சிறியாரோடு தீயன்மின்
- பாடல் பொருள் விளக்கம் :
- பொய், கடுஞ்சொல், இழிதகவுடைய சொற்கள், மற்றவர்களைக் குறைக் கூறுதல் ஆகியன செய்யாதீர்கள். அவ்வாறு செய்வீர்களாயின் தீமையே நடக்கும் என்பதை உணர்வீர்களாக என்பது பாடல் பொருளாகும். பிறர் மனைவியற்பால் செல்லாதொழிமின் என்றும் ஆசிரியர் வலியுறுத்தியுள்ளார்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

- 17. விரதத்தின் விரிவகை, பிறன்மனை நயவாமை முதலியன
- கள்ளன்மின் களவாயின யாவையும்
  கொள்ளன்மின் கொலை கூடி வரும் அறம்
  எள்ளன்மின் இலர் என்று எண்ணி யாரையும்
  நள்ளன்மின் பிறர் பெண்ணோடு நண்ணன்மின்
- பாடல் பொருள் விளக்கம்:
- களவு என்று கருதப்படுகின்ற தொழில் வாயிலாக எப்பொருளையும் கவர்தல் செய்யவேண்டாம். உயிர் கொலையோடு கூடிவருகின்ற அறங்களை மேற்கொள்ளவேண்டாம். வறியவர் என்று நினைத்து யாரையும் இகழவேண்டாம். ஆராயாமல் யாரிடமும் நட்பு கொள்ளவேண்டாம். பிறர் மனைவியர்பால் கவனம் செலுத்தவேண்டாம்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –
ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

18. உண்டி கொடுத்தலின் உயர்வு

துற்று உளவாகத் தொகுத்துவிரல் வைத்தது
அஃதெற்றுக்கெனின் இதுவதன் காரணம்
அற்றமில் தானம் எனைப்பலவாயினும்
துற்றுஅவிழ் ஒவ்வாத் துணிவு என்னும் ஆறே

பாடல் பொருள் விளக்கம்:

துறவியாகிய நான் சோற்றினை மிகுதியாக ஏற்றுக் கையிலேந்தி வருதல் கண்டு அங்ஙனம் செய்வதற்கு காரணம் என்ன? என்று கேட்பீர்களாயின், குற்றமில்லாத தானப்பொருள்கள் எவ்வளவாக இருப்பினும் அவையெல்லாம் உண்ணும் சோற்றிற்கு நிகராாது என்பது தெளிவான முடிவு என்பது பொருளாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

## 19. அருளுடைமை

- ஆற்றுமின் அருள் ஆருயிர் மாட்டெலாந்
  தூற்றுமின் இன்னறம் தோம் நனிதுன்னன்மின்
  மாற்று மின்கழி மாயமும் மானமும்
  போற்றுமின் மின்பொருளா இவைகொண்டு நீர்

- பாடல் பொருள் விளக்கம் :

- எவ்வுயிர்க்கும் அருள் செய்க. அறங்களையே அனைவருக்கும் அறிவுறுத்துக. தீவினையை செய்வதற்கு அஞ்சுங்கள். வஞ்சகத்தையும் மாண்பிறந்த மானத்தையும் விலக்குக. இந்த அறங்களையே பொருளாகப் பேணி நல்வாழ்வு வாழ்வீராக! என்பது பொருளாகும்.

## மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி –

ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன் நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

- 20. அருளுடைமை
- பொருளைப் பொருளாகப் பொதிந்து ஓம்பல் செல்லாது
  அருளைப் பொருளா அறஞ்செய்தல் வேண்டும்
  அருளைப் பொருளா அறஞ்செய்து வான்கண்
  இருள் இயல்பு எய்தாதது என்னோ நமரங்காள்.
- பாடல் பொருள் விளக்கம்:
- என்னுடைய சுற்றத்தார்களே! செல்வப் பொருளை மிகவும் ஈட்டுதலே மாந்தர்க்கு உறுதிப்பொருளாகவது என்று கருதி அவற்றைக் கட்டிவைத்துக் காத்திராமல் அருளையே உறுதிப்பொருளாகக் கருதி அப்பொருளாலே நல்லறங்களைச் செய்தல் வேண்டும். நீங்கள் பொருளீட்டுகின்றீர்கள் என்றாலும் அருளையே உறுதிப்பொருளாக உணர்ந்து அப்பொருளாலே அறங்களைச் செய்து அவ்வறத்தின் பயனாகிய மேனிலை உலக வாழ்வினைப் பெற்று அங்கு ஒளியுடைய பண்பினையுடைய முயலாமைக்குக் காரணம் என்னவோ? எனவே அறம் செய்யுங்கள் என்பது பொருளாகும்.

மூன்றாம் ஆண்டு இளங்கலை தமிழ் - முதன்மைத்தாள் - IX – ஐந்தாம் பருவம் - காப்பியங்கள் - 18BTA53C அலகு– 3 வளையாபதி – ஆசிரியர்: முனைவர் இ.சேனாவரையன்

நாள்: 02/04/05.11.2020 நேரம் :காலை 9.00 முதல் 9.50 வரை

- இரண்டு மதிப்பெண் வினாக்கள்
- 1. வளையாபதி கதை எந்த இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது?
  2. வளையாபதி காப்பியத்தை யாரால் மதிக்கப்பெற்றுள்ளது?
  3. வளையாபதியின் தந்தை பெயர் என்ன?
  4. வளையாபதியின் தந்தை எந்த ஊருக்கு சென்றார்?
  5. வளையாபதி காப்பியம் எந்த நூற்றாண்டைச்சேர்ந்தது?
- குறுவினா
- 1. வளையாபதி காப்பியம் - சிறுகுறிப்பு எழுதுக.
  2. வளையாபதி கதைச்சுருக்கத்தினை எழுதுக.
  3. வளையாபதியில் இடம் பெற்றுள்ள செய்யுளுறுப்புகள் என்னென்ன?
- நெடுவினா
- 1.வளையாபதி காப்பியச்சிறப்பும் கதைக்கருவும் குறித்து எழுதுக.
- 2.வளையாபதி காப்பியத்தில் இடம் பெற்றுள்ள அறக்கருத்துக்களை எழுதுக.